DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No. 22/2026**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

Name : முனியாண்டி (P.w. 4)
Father/Husband Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 8th day of June 2026

( எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை –**

நான் தற்போது குறையறைவாசித்தனில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை பார்த்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 8 மாதத்திற்கு முன்பு பாலமுருகன் ரெகுநாதமடை அருகே வெட்டுப்பட்டு விட்டதாக போன் மூலம் தகவல் சொன்னார். அந்த இடத்திற்கு நானும், மலைச்சாமியும் சென்றோம். அங்கு பாலமுருகன் ரத்தக்கறையுடன் நின்று கொண்டிருந்தார். அன்றே 1.30மணியளவில் திருச்சுழி போலிசார் சம்பவ இடத்தை பார்த்து படம் வரைந்தார்கள். அந்த பார்வை மகஜரில் நானும் மலைச்சாமியும் கையொப்பம் செய்தோம். (**அந்த பார்வை மகஜர் அசாஆ4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி–**

சம்பவம் நடந்த மறுநாள் என்னையும், மலைச்சாமியும் காவல் நிலையம் வரச் சொல்லி கையொப்பம் வாங்கினார்கள் என்றால் ஒரு கையொப்பம் காவல் நிலையத்திலும், ஒரு கையொப்பம் சம்பவ இடத்திலும் வாங்கினார்கள். வெள்ளை பேப்பரில் எழுதியிருந்தார்கள் அதில் நான் கையொப்பம் செய்தேன். முதல் விசாரணையில் சொன்னதுபோல் நான் சொன்ன தேதியில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. அசா1 எனக்கு வேண்டியவர் என்பதால் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No. 22/2026**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

Name : முத்துக்குமார் (P.w. 3)
Father/Husband Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 8th day of June 2026

( எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை –**

நான் தற்போது கீழமுடிமன்னார்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். அசா1 எனது அக்காவின் கணவர் ஆவார். கடந்த 21.11.2025ம் தேதியன்று கமுதிக்கு வேலைக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். அன்று 1.30மணியளவில் எனது தம்பி கருப்பசாமி போன் மூலம் மாமாவும், நானும் குறையறைவாசித்தான் ஊருக்கு இரு சக்கர வாகனத்தில் சென்றபோது ரெகுநாதமடை அருகே சென்றபோது 4 நபர்கள் மாமாவை வழிமறித்து அடித்து செல்போன், பணம் ஆகியவற்றை பறித்து சென்விட்டதாக கூறினார். அங்கு 2.00மணிக்கு ரெகுநாதமடைக்கு நான் சென்றேன். எனது மாமா பாலமுருகனை நான் வந்து பார்த்தபோது தலையின் பின்பக்கம் காயம் இருந்தது. ரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

உடனே எனது மாமா பாலமுருகனை எனதுஇருச்சக்கர வாகனத்தில் அழைத்துச் சென்று ரெட்டியபட்டியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன். மறுநாள் திருச்சுழி காவல் நிலையத்திற்கு நான், எனது மாமா பாலமுருகன், எனது தம்பி கருப்பசாமி, எனது மாமா முனியாண்டி ஆகியோருடன் வந்து என்மாமா பாலமுருகன் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி–**

சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சம்பவத்தை கேள்விபடவில்லை என்றால் சரியல்ல. என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No. 22/2026**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution / Defence

Name : கருப்பசாமி (P.w. 2)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 8th day of June 2026

( எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை –**

நான் தற்போது கீழமுடிமன்னார்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் மரம் அறுக்கும் வேலை செய்து வருகிறேன். அசா1 எனது அக்காவின் கணவர் ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 21.11.2025ம் தேதியன்று நானும், எனது அக்காவின் கணவர் பாலமுருகனும் தனது இருசக்கர வாகனத்தில் ரெட்டியாபட்டியில் இருந்து குறையறைவாசித்தான் ஊருக்கு வந்து கொண்டிருந்தோம். எனது மச்சான் பாலமுருகன் இரு சக்கர வாகனத்தை ஓட்டிக் கொண்டும், நான் பின்னால் அமர்ந்து கொண்டும் சென்றோம். பகல் 1.15மணியளவில் ரெகுநாதமடை அருகே நாங்கள் வந்தபோது ஆஜர் எதிரி மற்றும் 14, 16 வயது மதிக்கத்தக்க 3 நபர்கள் சட்டை இல்லாமல் சாட்ஸ் மட்டும் போட்டுக் கொண்டு ஒரு நபர்

அருவாளை வைத்து எனது மச்சானின் பின்பக்க தலையில் அடித்து இரு சக்கர வாகனத்தை தள்ளிவிட்டு அருவாளை வைத்து இரு சக்கர வாகனத்தை உடைத்தார்கள். எனது மைத்துனரின் கட்டை பையில் இருந்த ரூ.3000/– பணத்தை எடுத்துக் கொண்டார்கள். என்னை இரண்டு நபர்கள் பிடித்துக் கொண்டார்கள். அந்த நான்கு நபர்களும் இடது ஓரமாக காட்டுப்பக்கம் சென்றுவிட்டார்கள். 50 மீ தூரத்தில் உள்ள ரெகுநாதமடைக்கு சென்று தண்ணீர் வாங்கி குடித்துவிட்டு எனது அண்ணன் முத்துகுமாருக்கு தகவல் சொன்னேன். ஒரு மணிநேரம் கழித்து எனது அண்ணன் வந்துவிட்டார். நாங்கள் நான்குபேரும் சேர்ந்து வீரசோழன் காவல்நிலையம் சென்று எனது மச்சான் புகார் கொடுத்தார். வீரசோழன்போலிசார் சம்பவம் நடைபெற்ற இடம் திருச்சுழி எல்கைகுட்பட்ட பகுதி என்று சொன்னார்கள். எனது அண்ணனின் இரு சக்கர வாகனத்தில் ரெட்டியபட்டியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு எனது மச்சான் பாலமுருகனை அழைத்துச் சென்றோம். அதன்பிறகு மறுநாள் 22.11.2025ம் தேதியன்று எனது மச்சான் பாலமுருகன் திருச்சுழி காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி–**

1. அன்றையதினம் நாங்கள் எங்கு செல்வதாக திட்டமிட்டிருந்தோம் என்றால் ரெட்டியபட்டியில் இருந்து எனது மாமாவின் ஊரான குறையறைவாசித்தான் ஊருக்கு சென்றோம். வாகனம் உடைந்ததை போலிசாரிடம் ஒப்படைத்தோமா என்றால் ஒப்படைத்தோம். வாகனத்தை ஓட்டிக் கொண்டு சென்று ஒப்படைத்தோமா என்றால் ஓட்டிக் கொண்டு சென்றோம், ஒர்க்ஸ் ஷாப் கொண்டு செல்ல சொல்லிவிட்டார்கள். மறுநாள் எனது மச்சான் புகார் கொடுக்க செல்லும்போது நானும் காவல் நிலையம்

சென்றேனா என்றால் ஆமாம். எனது மச்சான் கொடுத்த புகார் மனுவில் நான் அறிவேன் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். புகார் மனு கொடுக்க வரும்போது காவல் நிலையத்தில் எதிரியுடன் சேர்த்து 5, 6 நபர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். அப்போது எதிரிகளை நாங்கள் பார்க்கவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் எதிரியுடன் சேர்த்து 5, 6 நபர்களை பார்க்கும்போது சம்பவத்தில் பார்த்த நபர்களா என்று எனக்கு தெரியவில்லை என்றால் சரிதான்.

2. பின்பு போலிசார் வந்து வழக்கிற்கு இந்த 4 நபர்களைதான் கைது செய்ய போகிறோம் என்று சொன்னார்கள் என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி சொன்ன நாள் நேரத்தில் நான் காவல் நிலையம் செல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் நான் இல்லை என்றால் சரியல்ல. என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No. 22/2026**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

Name : பாலமுருகன் (P.w. 1)
Father/Husband Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 8th day of June 2026

( எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை –**

1. நான் தற்போது ரெட்டியாபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் ஹோட்டலில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 21.11.2025ம் தேதியன்று குறையறைவாசித்தான் ஊருக்கு எனது TN 67 BX 0668 என்ற எக்ஸ்எல் இரு சக்கர வாகனத்தில் நானும், எனது மைத்துனர் கருப்பசாமியும் ரெட்டியாபட்டியில் பகல் 12.00மணிக்கு புறப்பட்டு ரெகுநாதமடை அருகே 1.15 மணியளவில் நாங்கள் வந்தபோது சாலையில் நின்று கொண்டிருந்த 4 நபர்கள் எங்களை வழிமறித்து அதில் ஒரு நபர் அரிவாளை வைத்து எனது தலையின் பின்புறம் அடித்தார். நான் கீழே விழுந்தவுடன் ஒரு நபர் எனது பையில் இருந்த Vivo செல்போனையும் ரூ.3000/– பணத்தையும் பறித்துக் கொண்டு கண்மாய் பக்கமாக

சென்றுவிட்டார்கள். எனது மைத்துனர், முத்துக்குமார் என்ற மற்றொரு மைத்துனருக்கு போன் செய்து எனது மைத்துனர் முத்துக்குமார் வந்தபிறகு அவரது இரு சக்கர வாகனத்தில் ரெட்டியாபட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தேன். மறுநாள் திருச்சுழி காவல் நிலையம் வந்து நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த புகார் மனு அதசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). புகார் கொடுத்த அன்றே மதியம் 1.15மணியளவில் திருச்சுழி போலிசார் காவல் நிலையத்திற்கு வருமாறு தகவல் கூறினார்கள். நான் மற்றும் இரண்டு மைத்துனர்கள் மற்றும் சித்தப்பாவுடன் திருச்சுழி காவல் நிலையம் சென்றோம். அங்கு ஆஜர் எதிரி இருந்தார். அந்த போனை நான் அடையாளம் காட்டினேன். நீதிமன்றத்தில் மனு செய்து Vivo செல்போனையும், பணம் ரூ.3000/−த்தையும் பெற்றுக் கொண்டேன். என்னிடம் செல்போனை பறித்து நான்கு நபர்களில் ஒருவரான ஆஜர் எதிரி நீதிமன்றத்தில் உள்ளார். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் செல்போன் என்னுடையதுதான். **(அந்த புகைப்படம் அசாஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள பணம் என்னுடையதுதான். **(அந்த புகைப்படம் அசாஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. என்னிடம் காட்டப்படும் ஆயுதங்கள் (எண்ணம்2) எதிரி மற்றும் 3 நபர்கள் பயன்படுத்தியது. அது **சாபொ1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

1. நான் தற்போது ரெட்டியாபட்டியில் இருந்து வருகிறேன். சொந்த ஊர் நொச்சிகுளம் ஆகும். நொச்சிகுளம் என்பது திருச்சுழியில் இருந்து வடக்கே 5கிமீ தொலைவில் உள்ளது என்றால் சரிதான். ரெட்டியாபட்டியில் இருந்து நொச்சிகுளம் செல்லவேண்டும் என்றால்

கத்தாலம்பட்டி விலக்கு, ஆலடிப்பட்டி, தமிழ்பாடி, திருச்சுழி வழியாக செல்லவேண்டும் என்றால் சரிதான். புகார் மனுவில் எனது இரு சக்கர வாகனத்தின் எண்ணை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லப்படும் வாகனங்கள் எதையும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆயுதங்கள் அனைத்தையும் காவல் நிலையத்தில் வைத்து பார்த்தேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் ஆயுதங்களை பார்க்கும்போது எதிரிகளை தெரியாது என்றால் சரிதான்.

2. சார்பு ஆய்வாளர் இந்த ஆயுதங்களைதான் வழக்கில் தாக்கல் செய்யபோகிறோம் இந்த ஆயுதங்களை தான் குறிப்பிடவேண்டும் என்று சொன்னார் என்றால் ஆமாம். அவ்வாறு சார்பு ஆய்வாளர் என்னிடம் சொல்லும்போது எதிரிகள் யாரும் அங்கு இல்லை என்றால் சரிதான். புகார் மனு கொடுக்க போகும்போது கிழக்கு பக்க ஊரைச் சேர்ந்தவர்கள்தான் திருடி இருப்பார்கள் என்று என்னிடம் அனுமானத்தின்பேரில் சார்பு ஆய்வாளர் சொன்னார் என்றால் சரிதான்.

3. நான் புகார் மனு கொடுக்க செல்லும்போது எதிரிகள் அனைவரும் காவல் நிலையத்தில் இருந்தார்கள் என்றால் சரிதான். ஒரு சில அதிகாரிகள் எதிரிகளின் பெயரை குறிப்பிட்டு புகார் கொடுக்கச் சொன்னார்கள் என்றால் சரிதான். நான் ஒரு புகார் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். ஆயுதங்களை காவல் நிலையத்தில் வைத்து முதன்முதலில் பார்த்தேனா என்றால் இல்லை, என்னை அடிக்கும்போது கையில் வைத்திருந்ததை பார்த்தேன். அதன் நீளம், அகலம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் எந்த சார்பு ஆய்வாளரிடம் புகார் கொடுத்தேன் என்று அவரது பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எந்த சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றும் அவரது பெயர் எனக்கு தெரியாது என்றாலும் சரிதான். சம்பவம் நடந்து மறுநாள்தான் புகார்

கொடுக்க காவல் நிலையம் சென்றேன் என்றால் சம்பவம் நடந்த அன்று புகார் கொடுத்தேன், மறுநாளும் ஒரு புகார் கொடுத்தேன். 2 நாட்கள் வழக்கு சம்பந்தமாக காவல் நிலையம் சென்றபோது எதிரிகள் அங்கு இருந்தார்களா என்றால் இரண்டாவது நாளில்தான் எதிரிகள் அங்கு இருந்தார்கள். அன்றையதினம் எதிரியோடு 5, 6 நபர்கள் இருந்தார்களா என்றால் நான் பார்க்கவில்லை. எதிரியின் பெயர், முகவரி எனக்கு தெரியாது என்றால் சரிதான், கேட்டுத் தெரிந்து கொண்டேன்.

4. எதிரிகளின் பெயர் , முகவரி தெரிந்து கொண்டு தான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை, தற்போது தெரிந்து கொண்டேன். எதிரியை போலிசார் பழிவாங்கவேண்டும் என்பதால் என் மூலம் புகார் பெறப்பட்டு எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லவேண்டிய அவசியம்இல்லை என்றால் சரியல்ல. என்னை தாக்கியதும், வழிப்பறி பண்ணியதும் எதிரிகள் இல்லை என்றால் சரியல்ல, எதிரிகள்தான் தாக்கினார்கள். என்னை தாக்கிய நபர்களை கண்டுபிடிக்க முடியாமல் ஏற்கனவே காவல் நிலையத்தில் இருந்த எதிரிகளை இவ்வழக்கில் சேர்த்துவிட்டார்கள் என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி, சொன்ன நாள், நேரத்தில் புகார் மனு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.